

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 343 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 08 – வெள்ளிக்கிழமை 24 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 343 : Thiruvalluvar Year - 2057 - Aadi 08 - Friday 24 July 2026 - Dak 8 Pages ₹ 5.00


## நாடு முழுவதும் வரலாறு காணாத மாணவர் போராட்டங்கள்!

# ‘நீட்’ முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டிய நேரம் இது !

## ‘தி இந்து’ நாளேட்டில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புக் கட்டுரை !

**சென்னை, ஜூலை 24-**

**நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டும் என்று நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், ‘நீட்’ முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டிய நேரம் வந்து விட்டது என்று குறிப்பிட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி இந்து’ நாளேட்டில் சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய (23.7.2026) ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை வருமாறு:-**

நீட் வினாத்தாள் கசிவைத் தொடர்ந்து வரலாறு காணாத வகையில் நாடு முழுவதும் மாணவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டங்கள், வெறும் ஒரு தேர்வின் நம்பகத்தன்மை சீர்குலைந்ததற்கான எதிர்வினை மட்டுமல்ல. தகுதி அடிப்படையிலானது என முன்னிறுத்தப்பட்ட ஓர் அமைப்பின் மீதான ஆழமான நம்பிக்கையிழப்பையே அவை வெளிப்படுத்துகின்றன. இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நடைமுறையின் நேர்மை மீதான நம்பிக்கை தகரும்போது, அது ஒரு நாட்டின் மனச்சாட்சியையே உலுக்குகிறது.

நீட்டுக்கு எதிராக முதன்முதலில் எச்சரிக்கைக் குரல் எழுப்பிய மாநிலம் தமிழ்நாடுதான். அதன் காரணம், நீட் தேர்வு நடத்தப்பட்ட விதத்தில் முறைகேடுகள் இருந்தன என்பதல்ல. மருத்துவம் படிக்க விரும்பும் ஒவ்வொரு மாணவரின் எதிர்காலத்தையும் ஒரு தேசிய நுழைவுத் தேர்வில் பணயம் வைத்து தீர்மானிக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையையே நாங்கள் கேள்விக்குட்படுத்தினோம். நடைமுறையில் பிரச்சினை என்பதைவிட அதன் அடிப்படையே பிரச்சினைக்குரியது. அண்மைய நிகழ்வுகள் எங்கள் கவலை முற்றிலும் நியாயமானது என்பதையே உறுதிப்படுத்தியுள்ளன.

### மூன்று வாக்குறுதிகளிலும் ‘நீட்’ முற்றிலுமாக தோல்வி!

**நீட்டை அறிமுகப்படுத்தியபோது, ஒன்றிய அரசு மூன்று முக்கிய வாக்குறுதிகளை அளித்தது. முதலாவதாக, பல்வேறு நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டிய சுமையை அது குறைக்கும் என்று கூறப்பட்டது. இரண்டாவதாக, மருத்துவச் சேர்க்கைகளில் நிலவி வந்த கேப்பிடேஷன் கட்டணம் மற்றும் வணிகமயமாக்கலை அது முற்றிலும் ஒழிக்கும் என உறுதியளிக்கப்பட்டது. மூன்றாவதாக, மிகத் தகுதியான மாணவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதை உறுதிசெய்வதன் மூலம் மருத்துவக் கல்வித் தரம் உயரும், அதன் விளைவாக சிறந்த மருத்துவர்கள் உருவாவார்கள் என்றும் கூறப்பட்டது.**

**ஆனால், இந்த மூன்று வாக்குறுதிகளிலும் நீட் முற்றிலுமாகத் தோல்வியடைந்துள்ளது.**



**“NEET மூன்று முக்கிய வாக்குறுதிகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டது: (1) சுமையைக் குறைப்பது, (2) வணிகமயமாக்கலை ஒழிப்பது, மற்றும் (3) தரத்தை மேம்படுத்துவது. இவை ஒவ்வொன்றிலும், #NEET தோல்வியடைந்துள்ளது. இது கற்றலின் மையத்தைப் பள்ளிகளிலிருந்து பயிற்சி மையங்களுக்கு மட்டுமே மாற்றியுள்ளது. NEETன் பிரச்சனை எப்போதுமே வெறும் நடைமுறைச் சார்ந்தது அல்ல, அது கட்டமைப்புச் சார்ந்தது. சமீபத்திய நிகழ்வுகள் அந்த கவலையை மெய்ப்பித்துள்ளன. தொடர்ந்து நடைபெற்று வரும் மாணவர் போராட்டங்கள் ஒன்றிய அரசுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாநிலங்களை நம்ப வேண்டிய நேரம் இது. NEETஐ ரத்து செய்ய வேண்டிய நேரம் இது.”**

சமத்துவமின்மையைக் குறைப்பதற்குப் பதிலாக, கற்றலின் மையத்தை பள்ளிக்கூடங்களிலிருந்து பயிற்சி மையங்களுக்கு நீட் மாற்றிவிட்டது. இன்று தகுதி என்பது தொடர்ச்சியான கல்விச் செயல்திறனின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை; பயிற்சி மையங்கள் கற்பிக்கும் தேர்வு எழுதும் உத்திகளை எவ்வளவு திறம்பட ஒரு மாணவர் கற்றுக்கொண்டுள்ளார் என்பதன் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இதன் பயனை, அதிக கட்டணம் செலுத்தி பயிற்சி பெறும் வசதியுள்ள மாணவர்கள் அதிகமாக அனுபவிக்கின்றனர். அதேவேளையில், கிராமப்புற மாணவர்கள், அரசுப் பள்ளி மாணவர்கள், முதல் தலைமுறையாகக் கல்வி கற்க வரும் மாணவர்கள், மாநிலப் பாடத்திட்டம் மற்றும் தாய்மொழி வழியில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோர் கடுமையாகப் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற நாடுகள், மாணவர்களைப் பள்ளிக் கல்விச் செயல்திறன், மதிப்பெண்களைச் சமன்படுத்தும் (Standardi sation) முறைகள் மற்றும் ஒட்டுமொத்தத் திறனை மதிப்பிடும் அணுகுமுறைகளின் அடிப்படையிலேயே சேர்க்கின்றன; நாடு முழுவதற்குமான ஒரே



NEET's promise has failed; it's time to trust States

M.K. Stalin

நுழைவுத் தேர்வின் அடிப்படையில் அல்ல. நுழைவுத் தேர்வுகள் பயன்படுத்தப்படும் இடங்களில்கூட, அவை பல்வேறு மதிப்பீட்டு அளவுகோல்களில் ஒன்றாகவே உள்ளனவே தவிர, சேர்க்கையைத் தீர்மானிக்கும் ஒற்றைக் காரணியாக அல்ல.

### வசதி படைத்தவர்களின் ஆதிக்கத்தை முன்னிறுத்துவதாகும்!

நீட் தேர்வில் இதுவரை நடந்தவையே, ‘தகுதி’ என்ற பெயரில் முன்வைக்கப்படும் வாதத்தின் மாயையை மேலும் அம்பலப்படுத்துகிறது. இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான தகுதித் தேர்ச்சி வரம்பு (Qualifying Threshold) மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. முதுநிலை மற்றும் உயர் சிறப்புப் படிப்புகளுக்கான சேர்க்கைகளில், அதிகக் கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடங்களை நிரப்புவதற்காக, தகுதிக்கான பெர்சென்டைல் பலமுறை பூஜ்ஜியமாகக் குறைக்கப்பட்டுள்ளது; சில நேரங்களில் பூஜ்ஜியத்துக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள்கூட தகுதி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தேர்வுமுறையானது உண்மையிலேயே தகுதியால் நிர்வகிக்கப்பட்டிருந்தால், இத்தகைய அசாதாரணமான தளர்வுகளுக்கான தேவையே எழுந்திருக்காது.

உண்மை நிலை இதற்கு முற்றிலும் மாறானது. **குறைந்த எண்ணிக்கையிலான அரசு மருத்துவக் கல்லூரி இடங்களுக்காக ஏழை மாணவர்கள் மிகக் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், பொருளாதார வசதி படைத்தவர்கள் மிகவும் தளர்வான தகுதி அளவுகோல்களிலேயே தனியார் மருத்துவக் கல்வியைப் பெற முடிகிறது. இது தகுதியை முன்னிறுத்துவது அல்ல; வசதி படைத்தவர்களின் ஆதிக்கத்தை அமைப்புரீதியாக நிலைநிறுத்தும் முறையாகும்.**

நீட் மருத்துவக் கல்வியின் வணிகமயமாக்கலைக் கட்டுப்படுத்தியுள்ளது என்பது மற்றுமொரு தவறான நம்பிக்கை. நீட்டை மையமாகக் கொண்ட ’கோச்சிங் சென்டர்’ தொழில், இன்று பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள வணிகமாக வளர்ந்துள்ளது. நீட்டுக்குத் தங்கள் பிள்ளைகளைத் தயார்படுத்துவதற்காக, குடும்பங்கள் பல ஆண்டுகளாகப் பெரும் தொகைகளைச் செலவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. நீட் அகற்றுவதாக வாக்குறுதியளித்த பொருளாதாரச் சுமை மறைந்துவிடவில்லை; அதன் வடிவம்தான் மாறியுள்ளது. கேப்பிடேஷன் கட்டணத்துக்கு பதிலாக, பயிற்சி மையக் கட்டணம் அந்த இடத்தைப் பிடித்துள்ளது.

### ஏழைக் குடும்பங்களுக்கு எட்டாக்கனியாக மாறியுள்ளது!

அதேநேரத்தில், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளும் மருத்துவக் கல்வியை வணிகமயமாக்கப் புதிய வழிகளைக் கண்டுபிடித்துள்ளன. முன்புபோல் கேப்பிடேஷன் கட்டணம் மற்றும் நன்கொடைகளை நேரடியாகக் கோருவதற்குப் பதிலாக, கல்விக் கட்டணம் மற்றும் பிற நிறுவனக் கட்டணங்களைப் பல மடங்கு உயர்த்தியுள்ளன. இதன் விளைவாக, ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்கு மருத்துவக் கல்வி மேலும் எட்டாக்கனியாக மாறியுள்ளது.


**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**


## நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி

# நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 24-*

*நாடாளுமன்ற திமுக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில் கழக எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். “நீட் தேர்வை ரத்து செய்” என்ற பதாகைகளை ஏந்தியும் டெல்லியில் மாணவர்கள் மீது தடியடி நடத்தியதைக் கண்டித்தும் தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.*

**கனிமொழி கருணாநிதி – டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் பங்கேற்பு!**

*தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நாடாளுமன்ற பிரதான வாசலில் போராட்டம் நடைபெற்றது. மக்களவை தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலு, கொறடா ஆ.ராசா, தயாநிதிமாறன் உள்ளிட்ட எம்.பி.க்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.*

*அப்போது, நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி பதாகைகளை ஏந்தி முழக்கங்களை எழுப்பினர். நீட் முறைகேடு குறித்து நாடாளுமன்ற இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். டெல்லியில் போராடும் மாணவர்கள் மீது தடியடி நடத்தியதைக் கண்டித்தும் தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர்.*

**திருச்சி சிவா உள்ளிட்ட மாநிலங்களவை உறுப்பினர்கள் பங்கேற்பு!**

*நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது.*

*இந்த போராட்டத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் பி.வில்சன், கிரிராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினர். அப்போது, டெல்லி மாணவர் போராட்டத்தில் புகுந்து தடியடி நடத்தியதற்கும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியதற்கும் கடும் கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர்.*

